**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 602** **நாள்: 23.10.2026**

**மாண்புமிகு மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் கோ. க. அருண்ராஜ் அவர்கள் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

மாண்புமிகு மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் கோ.க.அருண்ராஜ் அவர்கள் இன்று (23.10.2026) பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு-75, ஓட்டேரி சாலை, எஸ். எஸ். புரம் பகுதியில் நடைபெற்ற மழைக்கால மருத்துவ முகாமினைப் பார்வையிட்டு, பொதுமக்களுக்கு வழங்கப்படும் மருத்துவச் சிகிச்சைகள் குறித்து ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எஸ்.எஸ். புரம் பகுதியில் இதுவரை கண்டறியப்பட்டுள்ள காய்ச்சல் விவரங்கள் மற்றும் டெங்கு பாதிப்பு குறித்து மாநகர நல அலுவலரிடம் கேட்டறிந்தார். மேலும் கொசு ஒழிப்பு பணியாளர்கள் இப்பகுதிகளில் ஆய்வு மேற்கொள்கிறார்களா என்பதை பொதுமக்களிடம் கேட்டறிந்தார்.

முகாமில் கலந்து கொண்ட பொதுமக்களிடம் டெங்கு கொசு தடுப்பு குறித்த விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்களை வழங்கி, தங்கள் வீடு மற்றும் சுற்றுப்புறங்களில் உள்ள மழைநீர் தேங்கக்கூடிய தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

பின்னர் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பகுதியில் உள்ள வீடுகளின் மேல் தளங்களுக்கு சென்று மழைநீர் தேங்கியுள்ளதா என்பதை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது வீட்டின் மேல் தளத்தில் தண்ணீர் சேமித்து வைத்துள்ள பாத்திரங்களை எப்பொழுதும் மூடி வைக்க வேண்டும் என வீட்டின் உரிமையாளரிடம் அறிவுறுத்தினார். மேலும் மேல் தளத்தில் இருந்த தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்த அறிவுறுத்தி டெங்கு கொசு தடுப்பு குறித்த துண்டுப்பிரசுரங்களை அவர்களிடம் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எஸ்.எஸ்.புரம், 1ஆவது குறுக்குத் தெருவில் மழையின் போது தேங்கும் நீரை வெளியேற்ற அமைக்கப்பட்டுள்ள மோட்டார் பம்பினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், இத்தெருவில் பொதுமக்களின் கோரிக்கையின்படி மழைக்காலத்திற்கு பிறகு முறையாக சாலை அமைக்க மண்டல அலுவலர் மற்றும் செயற்பொறியாளரிடம் அறிவுறுத்தினார்.

பின்னர் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பகுதியில் அமைந்துள்ள அம்மா உணவகத்தினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பொதுமக்களுக்கு இன்று சமைக்கப்பட்ட பொங்கல் உணவினை சுவைத்து பார்த்து அதன் தரத்தினை ஆய்வு செய்தார். அம்மா உணவகத்தில் அமைக்கப்பட்டிருந்த சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இயந்திரத்தை உடனடியாக சரி

செய்து பயன்பாட்டிற்கு கொண்டுவர மண்டல செயற்பொறியாளரிடம் அறிவுறுத்தினார். உணவு சமைக்கும் பணியாளர்களிடம் பொது மக்களுக்கு சமைக்கப்படும் உணவினை சுத்தமாகவும் சுகாதாரத்துடனும் சமைத்து வழங்க வேண்டும் என அறிவுரைகள் வழங்கினார்.

இந்த ஆய்வின்போது திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் திருமதி எம். ஆர். பல்லவி, கூடுதல் இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை டாக்டர் சம்பத், மாநகர நல அலுவலர் டாக்டர் ஜெகதீசன், மண்டல அலுவலர் திரு. சதீஷ்குமார், செயற்பொறியாளர் திரு. அரிபாபு, மண்டல நல அலுவலர் டாக்டர் மோகனசுந்தரம் உட்பட பலர் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**